PRESS RELEASE – 118
29.10.2026

The Directorate of Vigilance and Anti-Corruption has registered a case in DVAC Hqrs in Crime No.02/2026 against Thiru K.N.Nehru, former Minister for MAWS Department and 7 others based on the complaint of the Enforcement Directorate, Chennai for the allegation of corruption and malpractices in process of recruitment of 2538 candidates to various branches of department of Municipal Administration and Water Supply. Money has been collected from the ineligible candidates and they were appointed as AE, JE, Sanitary Inspector, Draughtsman etc., in MAWS Department and the money has been routed through Hawala channels during the year 2024-25.

In the above case, as part of investigation, today searches were conducted at 25 places in Chennai, Trichy, Coimbatore, Namakkal, Tirunelveli etc and 170 criminating documents and 13 electronic gadgets connected to the investigation of the case were seized by the officers of V&AC. Investigation continues.

பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 118

29.10.2026

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம், சென்னை, அமலாக்கத்துறை இயக்குநகரம் அளித்த புகாரின் அடிப்படையில் திரு.K.N.நேரு, முன்னாள் அமைச்சர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் 7 பேருக்கு எதிராக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண். 02/ 2026-ல் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் பல்வேறு துறைகளுக்கு 2538 ஊழியர்களை நியமிக்கும் செயல்முறையில் ஊழலும் முறைகேடுகளும் நடைபெற்றுள்ளதாகவும், தகுதியற்ற விண்ணப்பதாரர்ளிடமிருந்து பெருமளவில் பணம் வசூலிக்கப்பட்டு அவர்கள் தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து இடங்களிலும் உதவி பொறியாளர்(AE), இளநிலைப் பொறியாளர்(JE), சுகாதார ஆய்வாளர், வரைவாளர் போன்ற பதவிகளில் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் அந்த பணம் 2024 - 2025 ஆம் ஆண்டில் ஹவாலா வழிகள் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அந்தப் புகாரில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த வழக்கில், விசாரணையின் ஒரு பகுதியாக, இன்று சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், நாமக்கல், திருநெல்வேலி உள்ளிட்ட 25 இடங்களில் சோதனை நடத்தப்பட்டு, வழக்கு விசாரணையுடன் தொடர்புடைய 170 குற்றத்தை நிருபிக்கும் ஆவணங்களும், 13 மின்னணு சாதனங்களும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டது.